**ORIGINAL ARTICLE**

# சுந்தரரும் தோழமையும் [CUNTARARUM TŌḺAMAIYUM]

# SUNTHARAR AND FRIENDSHIP

**சர்மிளா சதாசிவம் / Sharmila Sathasivam *[1]**

[1] Curriculum Inspection Sector, Jemaah Nazir, Ministry of Education Malaysia, Putrajaya, Malaysia. Email: Motchana68@gmail.com

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/158

**Abstract**

Periyapuranam is a biography of 63 devotees of the Saivisme. Suntharamurthi Nayanar is known as a leader of the great Periyapuranam. His biography is widely told in it. Suntharamurthi Nayanar's Thevaram or Thirumurai have been compiled as the seventh Thirumurai out of twelve Thirumurais. These are also called Thirupattu. The main four devotees followed different approaches to attaining the Lord. Suntharar's approach is sagamarkam which is unique among them. Suntharar used the method of friendship to reach the Lord. He had a close relationship with Lord Shiva as a friend. Thus, he got everything he wanted through Shiva. He has manifested this attitude in his Thirumurai and in his way of life. It is no wonder that Sundarar and his Thirumurai found prominence in the great Periyapuranam. This study is to explain the unique method of friendship that Suntharar undertook to attain Lord Shiva and to tell the companionship that existed between Lord Shiva and Suntharar.

**Keywords**: Periyapuranam, Panniru Thirumurai, Suntharamurthi Nayanar, Suntharar Thevaram, Friendship, Companionship, Sagamarkam.

**ஆய்வுச் சாரம்**

சைவ சமயத்தில் 63 நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுவது பெரியபுராணம். பெரியபுராணத்தின் படைப்புத் தலைவனாக சுந்தரமூர்த்தி நாயனார் திகழ்கிறார். அவரது வாழ்க்கைச் சரித்திரம் பெரியபுராணத்தில் பரவலாக கூறப்பட்டுள்ளது. சுந்தரமூர்த்தி நாயனார் இயற்றிய திருமுறைகள் பன்னிரு திருமுறைகளில் ஏழாவது திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளது. இவை திருப்பாட்டு என்றும் அழைக்கப்படும். சைவ சமயக் குறவர்களான நால்வரும் இறைவனை அடைவதற்கான வெவ்வேறு அணுகுமுறைகளைப் பின்பற்றினர். அதில் சுந்தரரின் சகமார்க்கம் எனும் அணுகுமுறை தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். இறைவனை அடைய சுந்தரர் நட்பு முறையை பயன்படுத்தினார். சிவனுடன் தோழமை பூண்டு சுந்தரர் ஒரு நண்பராக சிவபெருமானுடன் நெருங்கிய உறவைக் கொண்டிருந்தார். இதனால் தான் விரும்பிய

அனைத்தையும் சிவன் மூலம் பெற்றுக் கொண்டார். இந்த அணுகுமுறையினை தமது திருமுறைகளின் வழியும் வாழ்க்கை நெறிகளிலும் புலப்படுத்தியுள்ளார். இதனால், சுந்தரருக்கும் அவரது திருமுறைகளுக்கும் பெரியபுராணத்தில் சிறப்பிடம் கிடைத்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இந்த ஆய்வு சுந்தரர் இறைவனை அடைய மேற்கொண்ட நட்பு முறையை விளக்குவதோடு சிவபெருமானுக்கும் சுந்தரருக்குமிடையே இருந்த தோழமையையும் அதன் சிறப்பையும் கூறுவதேயாகும்.

**கருச்சொற்கள்:** பெரியபுராணம், பன்னிரு திருமுறை, சுந்தரமூர்த்தி நாயனார், சுந்தரர் தேவாரம், நட்பு முறை, தோழமை, சகமார்க்கம்.

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 11th May 2021, revised 28th June 2021, accepted 9th July 2021

**முன்னுரை**

சைவ சமயத்தின் 63 நாயன்மார்களில் நால்வர் முக்கிய இடம் பெறுகின்றனர். அவர்கள் முறையே திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார் மற்றும் மாணிக்கவாசகர் ஆவர். இந்நால்வரில் யோகமும் பக்தியும் இணைய வாழ்ந்தவர் சுந்தரமூர்த்தி நாயனார். தென் இந்திய நாடுகளில் புத்தமும் சமணமும் வலுப்பெற்றிருந்த காலகட்டத்தில் சைவ சமயத்தை நிலைநாட்டவும் தழைத்தோங்கச் செய்யவும் வந்தவர்களுள் சுந்தரரும் ஒருவராவார். 63 நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறு இடம்பெற்றிருக்கும் பெரியபுராணத்தில் சுந்தரரின் வாழ்க்கை வரலாறு பரவலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சுந்தரரின் திருமுறைகள் பன்னிரு திருமுறைகளில் ஏழாம் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அவை திருப்பாட்டு என்றும் அழைக்கப்படும் (வெள்ளைவாரணன், 2011)[1].

சுந்தரமூர்த்தி நாயனார் திருநாவலூர் எனும் ஊரில் சிவபக்தர்களான சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் பிறந்தார். நம்பியாரூரர் எனும் இயற்பெயரைக் கொண்ட சுந்தரரின் அழகு கண்டு திருமுனைப்பாடியின் அரசரான நரசிங்க சோழர் அவரை வளர்க்கலானார் (காசிவாசி முத்துக்குமார சுவாமி தம்பிரான் சுவாமிகள், 1992)[2]. திருமணப் பருவம் எய்தியதும் பெற்றோர் முடிவு செய்திருந்த பெண்ணை மணமுடிக்கும் தருவாயில் சிவபெருமான் வயோதிகர் வேடத்தில் வந்து சுந்தரரை ஆட்கொண்டார். பெரியபுராணத்தில் சுந்தரர் கைலாயத்தில் சிவபெருமானின் சுந்தர உருவினின்று உதித்தவரென்றும் பார்வதி அம்மையாரின் பணிப்பெண்கள் இருவரின் மேல் கொண்ட மையலின் காரணமாக பூவுலகில் அவதரிக்க அனுப்பப்பட்டதாகவும் கூறப்படுகிறது. பூமியில் பிறப்பெடுத்து ஆசைகளில் உழன்று போகும் தருணம் தன்னை வந்து தடுத்தாட்கொள்ளுமாறு சுந்தரர் வேண்டியிருந்தபடியால், சிவபெருமான் அவரைத் திருமணக் கோலத்தில் தடுத்தாட்கொண்டார்.

சுந்தமூர்த்தி நாயனார் 38000 திருமுறைகளைப் படைத்திருந்தாலும் 1026 பாடல்கள் மட்டுமே காலத்தால் அழியாமல் கிடைக்கப்பெற்றன (கோபால ஐயர், 2005)[3]. சுந்தரரும் அவரது திருமுறைகளும் பெரியபுராணத்தில் சிறப்பிடம் பெறுகின்றன. சுந்தரர் சிவபெருமானுடன் மேற்கொண்ட சகமார்க்கம் எனும் நட்பு முறை சுந்தரருக்கு தனிச்சிறப்பை ஏற்படுத்தியது என்றால் அது மிகையில்லை. சுந்தரர் இறைவனுடன் கொண்ட நட்புறவின் காரணமாக தனக்கு

வேண்டியவற்றைத் தோழரிடம் கேட்டுப் பெறுவதைப்போன்று உரிமையுடன் கேட்பார். சுந்தரரின் தூய அன்பும் உறவும் இறைவனாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதென்பதற்கு, சுந்தரர் வேண்டியனவற்றை சிவபெருமான் அவருக்கு அளித்ததிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

சுந்தரரின் வாழ்வை உற்று நோக்குங்கால், அவரைப் போன்று சகலபோகங்களுடன் வாழ்ந்த நாயன்மார் யாருமில்லை. ஆயினும் அவர் அனைத்து சிவனடியார்களுக்கும் தான் அடியார் என பணிவுடன் அனைவரையும் வணங்கி 'திருத்தொண்டத்தொகை' பாடியருளினார். சிவனடியார்களின் சிறப்பைக் கூறும் திருத்தொண்டத்தொகை, அதனைப் பாடிய சுந்தரருக்கும் சிறப்பைத் தந்துள்ளது. சுந்தரர் தமது வாழ்வனைத்தும் சிவசிந்தனையோடு பாடியருளிய பதிகங்களில் தனக்கும் சிவபெருமானுக்குமிடையிலான தோழமையை வெகுவாகப் பதிவு செய்திருப்பதை அறிய முடியும்.

**உறவு**

கடவுளை மகிமைப்படுத்துவதற்கும், வழிபடுவதற்கும், அருட்கொடைகளைப் பெறுவதற்கும் ஒவ்வொரு மதத்திற்கும் அதன் தனி வழி உள்ளது. எல்லா மதங்களிலும், பக்தருக்கும் கடவுளுக்கும் இடையேயான தொடர்பு நடைபெறக்கூடும் என்றும் அத்தொடர்பு சரியான முறையில் இருந்தால் நிச்சயம் நன்மை பயக்கும் என்றும் கருதுகின்றனர். ஒரு பக்தர் தனது கடவுளிடமிருந்து கருணையைப் பெறுவதற்கோ அல்லது கடவுளுடனான உறவில் தன்னை எவ்வாறு நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்கோ குறிப்பிட்ட வழிமுறைகள் உள்ளன (Robert Lavenda & Emily Schultz, 2010)[4]. இதையே சைவ சமய ஆச்சாரியர்களுள் ஒருவரான 'அப்பர்' என்று அழைக்கப்படும் திருநாவுக்கரசர் தமது திருமுறையில் விளக்கியுள்ளார்.

*"உறவு கோல் நட்டு உணர்வு கயிற்றினால்*
*முருக வாங்கிக் கடைய முன் நிற்குமே"* (5:90:10)

அதாவது, யாரொருவர் கடவுளை வணங்குவதற்குச் சகோதரத்துவ உறவு அல்லது நட்புறவை உருவாக்கிக் கொள்வதோடு அவ்வுறவைக் கொண்டு கடவுளுடன் தொடர்பு கொள்வாரேயானால், கடவுள் அந்த உறவை நிச்சயம் ஏற்றுக்கொள்வார். அதுமட்டுமின்றி அவரால் அவ்வுறவின் மூலம் கடவுளின் இருப்பையும் வருகையையும் உணர முடியும் என்பதில் ஐயமில்லை.

கடவுள் மீதான சிந்தனை மற்றும் பக்தியை மையமாகக் கொண்ட வாழ்க்கையில், ஒவ்வொரு நாயன்மாரும் வெவ்வேறு வழிபாட்டு முறைகளையும், சிவபெருமானுடனான தொடர்புகளையும் கடைப்பிடித்தனர். உதாரணமாக, திருஞானசம்பந்தர் சிவனைத் தன் தந்தையாகவும் தன்னை அவரது குழந்தையாகவும் கொண்டு கடவுளை வணங்கினார். இவர் சத்புத்திர மார்க்கம் அதாவது தந்தை மகனுக்கிடையிலான உறவைப் போன்றதொரு உறவை ஏற்படுத்திக் கொண்டார். திருநாவுக்கரசர் தன்னை அடிமையாகவும் கடவுளை தலைவனாகவும் கொண்ட தச மார்க்கம் எனும் உறவை ஏற்படுத்தி சிவனை வணங்கினார். சுந்தரமூர்த்தி நாயனார் கடவுளை வணங்குவதற்கான சக மார்க்கம் எனும் நட்பின் வழியைக் கொண்டார். அவர் கடவுளை தனது சிறந்த நண்பராக ஏற்றுக்கொண்டு வணங்கினார். நான்காவது நாயன்மாரான மாணிக்கவாசகர் சிவனைத் தனது காதலனாகக் கொண்டு ஞான மார்க்கம் எனும் வழியில் வணங்கினார். சமயக் குறவர்கள் நால்வரால் பின்பற்றப்பட்ட வழிபாட்டு முறைகளில் ஏதாகிலும் ஒன்றைப் பிற நாயன்மார்கள் பின்பற்றினார்கள் (ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமசாரிய சுவாமிகள், 1997)[5]. சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமானுடன்

நெருங்கிய நட்பைக் கொண்டிருந்ததால் அவர் சைவ சமய நாயன்மார்களில் தனிச்சிறப்பு பெற்றவராகக் கருதப்படுகிறார். கடவுளை தனது நெருங்கிய நண்பராக்குவதன் மூலம் கடவுளை வணங்குவதில் நட்பின் ஒரு புதிய அடையாளத்தை சுந்தரர் உருவாக்கியுள்ளார் (சோமசுந்திரம் 2001)[6].

**சகமார்க்கம்**

ஒரு நண்பரிடம் செலுத்தப்படும் அன்பு நட்பு என்று கூறப்படுகிறது. உலகில் மிக உன்னதமான மனித உறவுதான் நட்பு என்பதை திருக்குறள் வலியுறுத்துகிறது. நட்பு ஒருவரின் வாழ்க்கையை முழுமையாக்க உதவுகிறது. சகமார்க்கம் எனப்படுவது இறைவனுடன் தொடர்பு கொள்ளவும் அவரை அடையவும் ஒருவர் மேற்கொள்ளும் நட்பு முறையிலான பக்தி நெறி (கந்தசாமி நல்லுசாமி, 1993)[7]. திருமந்திரத்தில்,

*"சன்மார்க்கந் தானே சகமார்க்க மானது*
*மன்மார்க்கம் மம்முத்தி சித்திக்குள் வைப்பதாம்"* (10:5:1)

என திருமூலர், சைவ நெறிகளில் யோகத்தை சகமார்க்கம் என்பதாகக் கூறுகிறார். சகமார்க்கம் என்பது தோழமை நெறி (வரதராஜன், 1999)[8]. பால பெருமாள் 'பகவத் கீதை மற்றும் திருமுறையில் யோகம்' எனும் தலைப்பிலான தமது ஆய்வில் 'சாக்ய பவ' எனும் கருப்பொருளின் அடிப்படையில் பக்தருக்கும் கடவுளுக்குமான நட்பினை விளக்குகிறார். 'சாக்ய பவ' என்பதன் மூலம் பரிந்துரைக்கப்பட்ட அன்பு இரண்டு சகாக்களுக்கு இடையே உருவாக்கப்பட்ட நட்பு போன்றது என்று அவர் கூறுகிறார். ஆக, கடவுளை நெருங்கிய நண்பராகப் பாவிக்கும் மாண்பு 'சாக்ய பவ' என்றழைக்கப்படுகிறது. நண்பராகக் கொண்டிருந்தாலும் இறைவனுக்கு வழங்கப்பட வேண்டிய மதிப்பு குறைவின்றி வழங்கப்படும். இந்தச் சூழலில் பக்தர் தெய்வீக நல்வாழ்வுக்காகவும் கடவுளை வழிபடுவதற்காகவும் எதையும் தியாகம் செய்யத் தயாராக இருப்பார் (பால பெருமாள், 2013)[9].

**சுந்தரரும் தோழமையும்**

சுந்தரர் தமது பாடல்களில் 'தோழன்', 'என்னுடைய தோழனுமாய்', 'தன்னைத் தோழமை தந்தருளி', 'என்றனை ஆழ் தோழனாய்' எனும் சொல்லாடல்களைப் பல இடங்களில் பயன்படுத்தியுள்ளார். இச்சொல்லாட்சி சுந்தருக்கும் சிவபெருமானுக்குமிடையிலான தோழமையை எடுத்துக்காட்டுவதற்கான சிறந்த சான்று எனலாம். சுந்தரரின் வாழ்வில் தான் இறைவனுடன் கொண்ட தோழமையைக் கொண்டு தனக்கு வேண்டியவற்றைச் சங்கடமோ தயக்கமோ இல்லாமல் நேரடியாகக் கேட்டு பெற்றுக் கொண்டார். இறைவனும் திருவாரூரில் அசரீரியாக அவ்வுறவை ஏற்றுக் கொண்டதாய் அறிவிக்க அன்று முதல் சிவனடியார்கள் சுந்தரரைத் 'தம்பிரான் தோழன்' என்றழைத்தனர் (சங்க நடராஜா, 1988)[10].

சுந்தரரின் சகமார்க்கத்தைத் தெளிவாக விளக்கும் வகையில் சுந்தரரின் பாடல்கள் மட்டுமின்றி அவரது வாழ்க்கையிலும் பல சூழல்களைக் கோடி காட்ட முடியும். முக்கியமானதொரு சூழல் யாதெனில், சுந்தரர் சேரமான் பெருமானிடம் பெற்றுக் கொண்ட செல்வங்களை எடுத்துச் செல்லும் வழியில், சில பூதகணங்கள் அவற்றைக் கொள்ளையடித்துச் செல்கின்றன. திருமுருகன்பூண்டியில் வாழும் சிவனிடம் சுந்தரர் அதை முறையீடு செய்வதோடு, யாருக்கும் பாதுகாப்பற்ற இவ்விடத்தில் நீர் மட்டும் உம் துணைவியாரோடு ஏன் இருக்கிறீர்

என்று பாடி வினாக்களைத் தொடுப்பது சுந்தரர் சிவபெருமான் மீது கொண்டிருந்த பாசத்தை வெகுவாக வெளிப்படுத்துகிறது. இறைவனிடம் யாரும் கொள்ளையடிக்க முடியாது என்பதையும் இவ்வாறு கொள்ளைகள் நடப்பதை இறைவன் அறியாமல் இல்லை என்பது தெரிந்திருந்த போதிலும், சுந்தரர் 'எந்துக்கிங் கிருந்தீர் எம்பிரானே' என்று கேட்கையில் அவரது அளவு கடந்த அன்பு அங்கே புலப்படுகிறது. இறைவன் சுந்தரர் தம்மீது காட்டும் எல்லையில்லா அன்பை பிறருக்கு வெளிப்படுத்தவே பூதகணங்களை ஏவி கொள்ளையடிக்கும் சூழலை உருவாக்கினார்.

இரண்டு மனைவிகளை மணந்து இந்த பூமியில் ஆடம்பரமான வாழ்க்கை வாழ்ந்த போதிலும் சுந்தரர் துறவற வாழ்வையே மேற்கொண்டிருந்தார். சுந்தர் ஒருபோதும் சிவனைத் தவிர வேறு சிந்தனையில் இருந்ததில்லை. இதற்குக் காரணம் சுந்தரர் முற்பிறவியில் வேண்டியதுபோல தக்க தருணத்தில் இறைவனால் தடுத்தாற்கொள்ளப்பட்டதேயாகும். அத்தருணம் வயோதிகர் உருவில் வந்த சிவனைப் 'பித்தா' என்றழைத்தபோதும் அதை ஏற்றுக் கொண்டு அச்சொல்லாலேயே தம்மைப் பாடுமாறு சுந்தரரைப் பணித்த சிவனின் பாசத்தை என்னவென்று சொல்வது. அதைத் தொடர்ந்து தம்மிடம் கடிந்து பேசியதால் சிவபெருமானே சுந்தரருக்கு 'வன்தொண்டர்' என்ற பெயரிட்டார் (அரங்க இராமலிங்கம், 2010)[11]. சுந்தரரின் பாடலில் வரும் 'அணுக்கன் வன்தொண்டன்' எனும் சொல்லாடலும் அவர்களது நெருங்கிய உறவைப் பறைசாற்றுகிறது.

அதுமட்டுமின்றி கடவுளுக்கும் சுந்தரமூர்த்தி நாயனாருக்கும் இடையிலான நட்பு தனித்துவமானதாகக் கருதப்படுகிறது. கடவுளுக்கும் சுந்தரருக்கும் இடையிலான நட்புக்கு வரம்புகள் இல்லை. சிவன் தன்மீது கொண்ட அன்பினால் தனக்காக எதையும் செய்வார் என்பதை அறிந்திருந்த சுந்தரர், தன் மீது கோபம் கொண்ட மனைவி பரவையாரைச் சமாதானம் செய்ய இறைவனையே தூது அனுப்பினார். சுந்தருக்காக எல்லாம் வல்ல சிவனே தூது சென்றது இவர்களது நட்பின் அடையாளமாக உயர்ந்து பேசப்பட்டது. சுந்தரமூர்த்தி நாயனார் இம்மையுலகில் தான் வாழ்வதற்குத் தேவையான செல்வங்களைக் கேட்பதோடு மறுமை உலகில் சிவபதம் அடையும் கோரிக்கையையும் சிவனிடம் வேண்டும் திறம் பெற்றிருந்தார் (சற்குணவதி, 2010)[12]. இதுவே சுந்தரர் மண வாழ்விலும் யோக நிலையைப் பின்பற்றினார் என்பதற்குச் சான்றாகும்.

அதோடு, சுந்தரருக்குத் தொடர்ந்து அரிசி வழங்கிக்கொண்டிருந்த குண்டையூர்க்கிழார் விளைச்சல் இல்லாமல் போகவே, மிகவும் கவலையுற்றிருந்தார். சுந்தரரை மிகவும் நேசித்த சிவன் குண்டையூர் கிழாரின் கனவில் தோன்றி, சுந்தரரின் பட்டினியைத் தவிர்ப்பதற்காக தாம் அரிசிக் குவியல் வழங்குவதாக அறிவித்தார். இதுபோலவே மற்றொரு சமயம், திருகருக்காவூரில் சிவபெருமானை வணங்குவதற்காக வெகுதூரம் பயணித்ததன் விளைவாக பசியும் சோர்வும் அடைந்த சுந்தரருக்கு சிவபெருமானே ஒரு வழிப்போக்கராக அவதாரம் எடுத்து உணவும் பானமும் கொடுத்தார் (வெள்ளைவாரணன், 2011)[1]. சுந்தரமூர்த்தி நாயனார் பட்டினி கிடப்பதைக் காண இயலாத சிவன் எந்தச் சூழ்நிலையிலும் எப்போதும் சுந்தரருக்கு உணவளிக்கத் தவரவில்லை என்பதை இச்சூழல் விளக்குகிறது.

துன்பத்தில் இருக்கும் ஒரு நண்பரின் உணர்வுகளை மதிக்க அவருக்குத் தேவையான உதவியை வழங்குவது ஒரு சிறந்த தோழரின் கடமையாகும். பங்குனித் திருவிழாவில் தொண்டு செய்ய தனது மனைவிக்குப் போதுமான பணம் இல்லையென்பதால் அச்செல்வத்தைக் கடவுளிடமிருந்து பெற்றுக் கொள்வதற்காக சுந்தரர் திருப்புகலூர் கோவிலுக்குச் சென்றார்.

கடவுளை வணங்கி, தன் சித்தத்தைக் கூறியபின் கோயிலைச் சுற்றியிருந்த செங்கற்களைக் குவித்து அதில் உறங்கினார் சுந்தரர். அவர் நித்திரையிலிருந்து விழித்தபோது, அவர் படுத்திருந்த செங்கற்கள் தங்கங்களாக மாறியிருந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டார். கடவுளுடன் உருவாக்கப்பட்ட நட்பின் காரணமாக எல்லா நேரங்களிலும் கடவுள் இருப்பதை சுந்தரர் அறிந்திருந்தார். இந்த நிகழ்வு எந்த நேரத்தில் சுந்தரர் வேண்டினாலும் அக்கணமே கடவுள் போதுமான செல்வத்தையும் தங்கத்தையும் கொடுத்திருக்கிறார் என்பதை வலியுறுத்துகிறது. இது சிவபெருமானுடன் சுந்தரமூர்த்தி நாயனாருக்கு இருந்த நெருங்கிய உறவைக் காட்டுகிறது.

அதனைத் தொடர்ந்து, திருமுதுகுன்றில் இறைவனிடமிருந்து பெற்றுக்கொண்ட செல்வத்தை திருவாரூரில் தனக்குத் தந்தருளுமாறு சுந்தரர் வேண்டினார். சிவபெருமானும் திருமுதுகுன்றில் இருக்கும் மணிமுத்து ஆற்றில் அதைப் போட்டு திருவாரூரில் உள்ள குளத்தில் எடுத்துக் கொள்ளுமாறு பணித்தார் (வெள்ளைவாரணன், 2011)[1]. திருமுதுகுன்றில் கிடைத்த செல்வம் திருவாரூரில் கிடைக்கப்பெறுவது அசாதரணமான காரியம் அதிலும் ஆற்றில் விட்டு குளத்தில் எடுப்பது முற்றிலும் சாத்தியப்படாத ஒன்று. சர்வவல்லமையுள்ள கடவுளின் ஆசீர்வாதத்தினால் மட்டுமே இதுபோன்ற நிகழ்வை நடத்த முடியும். இந்த விளையாட்டுகள் மற்றும் நிகழ்வுகள் மூலம் சிவபெருமானும் சுந்தரரும் தங்கள் வலுவான நட்பை நிரூபித்துள்ளனர்.

தன் பொறுப்புகளை நிறைவேற்றிய சுந்தரர் தான் இறையோடு கலக்கும் தருணத்தை உணர்ந்தவராய் திருவாஞ்சைக்கலம் கோவிலில் இறையடி சேர வேண்டி நின்றார். சுந்தரரை அதிகம் நேசித்த இறைவன், அவரது விருப்பத்திற்கேற்ப தம்மிடம் அழைத்துக் கொள்ள வெள்ளையானை ஒன்றினை அனுப்பி வைத்தார். எந்த ஒரு இராஜ யோகியும் தன் சூக்கும உடலைக் கொண்டே இறையடி சேர முடியும். ஆனால் சுந்தரரை வெள்ளையானை மூலம் அவருடைய தூல உடலுடன் தம் அடி சேர அழைத்துக் கொண்ட சிவபெருமான் சகமார்க்கத்தின் வழி சுந்தரருக்கு முக்தி அளித்தைத் தெளிவுபடுத்துகிறது. இதுபோன்ற முக்தி வேறெந்த நாயன்மாருக்கும் பக்தருக்கும் கிட்டாதது சுந்தரருக்கும் அவரது தோழமைக்குமான தனிச்சிறப்பை வலுவாகப் பறைசாற்றுகிறது. அதோடு, கைலாயம் செல்லும் வழியில் வருண தேவன் சிவனோடு சேர்த்து சுந்தரரையும் வணங்கியதும், திருமாலும் பிரம்மனும் சுந்தரரை சிவபெருமானின் தோழனாக வரவேற்றதும், மேலுலகில் தேவர்கள் சுந்தரரை யாரென்று வினவுகையில் சிவபெருமானே 'நந்தம் ஊரன் திருநாவலூரன்' என்று கூறுவதும் இறைவனுடனான சுந்தரரின் உறவுக்கு கிடைத்த அங்கீகாரம் ஆகும்.

இறுதியாக கடவுளுக்கும் சுந்தரமூர்த்தி நாயனாருக்கும் இடையிலான நட்பு எனும் அன்பின் பிணைப்பு மனிதர்களுக்குக் கடவுளுடன் ஓர் உறவை ஏற்படுத்துவதற்கான வழிகாட்டியாகும். ஆன்மாவை சிவபதம் அடையச் செய்யும் வழிகளை இதுபோன்ற உறவுகள் எளிதாக்குகின்றன. இந்த நட்பு இணக்கமான உள்ளுணர்வுகளை அடிப்படையாகக் கொண்டது. சுந்தரரின் வாழ்க்கை வரலாற்றில் ஆரம்பம் முதல் இறுதி வரை நடந்த அனைத்து நிகழ்வுகளும் அவர் சிவபெருமானுடன் நெருக்கமான, தனித்துவமான நட்பைக் கொண்டிருந்ததை நிரூபிக்கின்றன. சுந்தரரின் வாழ்க்கையில் சகமார்க்கம் எனும் தோழமை நெறி முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது என்பதற்கு அவரது வாழ்க்கை நிகழ்வுகளும் திருமுறைகளும் சிறந்த சான்றென்பதை மறுக்கவியலாது.

**மேற்கோள் நூல்கள்:**


1. Vellaivaaranan, K. (2011). *Panniru Thirumurai Varalaru [History of Twelve Thirumurai]*. Chennai: Ramaiya Publications.
2. Kasivasi Muthukumaraswamithambiran Swamigal. (1992). *Suntharamurthi swamigal Thevaram [Devotional Song of Suntharamurthi Swamigal]*. Sri Kumaragurubarar Accagam.Sri Kasimadam.Thriupananthal.
3. Gopala Aiyar. V. (2005). *Thevaram Ayvuthunai [Analysis of Thevaram]*. Kuala Lumpur: Malaysian Indian Congres.
4. Lavenda, R. H., & Schultz, E. A. (2010). *Core concepts in cultural anthropology*. McGraw-Hill.
5. Swamigal, S. S. (1997). *Suntharar Thevaram [Thevaram of Suntharar]*. Mayilaaduthurai: Nyaanasambantham Pathippagam. Sdn. Bhd.
6. Somasundram, M. (2001). *Saiva Siddhantha Katturaigal [Essays of Philosophy of Saivisme]*. Kuala Lumpur: Percetakan Bintang.
7. Nallusamy, K. (1993). *Sangga ilakkiyattil Murugan [Murugan in the Sangam Literature]*. Journal of Indian Studies 5.
8. Varadarajan. Mu. (1999). *Ilakkiya Aaraaichi [Research in Literature]*. Chennai: Pari Nilaiyam
9. Bala Perumal, (2013). *Yoga dalam Bhagavatgita dan Thirumurai [Yoga In Bhagavat Gita and Thirumurai]*. PhD Thesis. Indian Studies, University of Malaya: Kuala Lumpur.
10. Sangga Nadaraja. (1988). *Saiva Samaya Aachariyar Naalvar [Four devotees of Saivisme]*. Kuala Lumpur: Malaysian Indian Congres.
11. Arangga Ramalingam (2010). *Sunthararin Thozhamai Neri [Companionship of Sundarar]*. Periyapurana Aayvu Nool. Vijaya Pathippagam. p. 59-61.
12. Sarkunavathi. M (2010). *Periyapuranattil Natpu [Friendship in Periyapuranam]*. Periyapurana Aayvu Nool. Vijaya Pathippagam.